உ

சிவமயம்



யாழ் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்
பூநகரி, பிரான்ஸ், இலண்டனை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் திருமதி பாக்கியம் பொன்னையா** அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

19.03.2018

In Loving Memory of

# Late Mrs Packiam Ponniah

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி
உருகி ஒளியூட்டி, ஆல மரமாகஎம் குடும்பத்திற்கு
நிழல் பரப்பி எம்மையெல்லாம் அன்போடும்
பண்போடும் பாசத்தோடும் வளர்த்து
நல்வழிகாட்டி, நற்கல்வியூட்டி,
உறுதுணையாக இருந்து
சொந்தபந்தங்கள் அனைவருக்கும்
பக்கபலமாய் இருந்துசீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய், குடும்பத்தின் தலைவியாய்,
தாயாய்மனம் பலமாண்புடன் பரப்பி
இனமெல்லாம் இன்புடன் வாழ ஏற்ற நற்பணிகள்
காத்துவையத்துள் என்றும்
நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினியமலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி
என்றும் நீங்காநினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

சிவமயம்

# அமரர் திருமதி **பாக்கியம் பொன்னையா** அவர்கள்

அன்னை மடியில்
29 * 07 * 1932



ஈசன் அடியில்
17 * 02 * 2018

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த மாசியில்
பூண்ட பூர்வ துவிதியைதிதியதனில் - மாண்பு
பொன்னையா பத்தினியார் பாக்கியம் அம்மை
தன்னுடலம் நீத்தார் காண்.

உ

சிவமயம்



## தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

### தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்ந்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்மை மறந்தாள் தன்மானங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

### திருவாசகம்

நெறியில்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தையெனக் (கு)
அறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின் கீழ் இருக்க வென்றார்

## திருப்புகழ்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



## சகலகலாவல்லி மாலை

1. வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்து
உண்டானுறங்க ஒழித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்கையாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே

3. அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகலகலா வல்லியே

4. தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய் வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ் செல்வமும்
தொண்டர் செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலா வல்லியே

5. பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலா வல்லியே

6. பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயயெழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலா வல்லியே

8. சொல்விற் பனமு மவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்
வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதன் றொருகால
முஞ்சிதையாமை நல்குங்
கல்விப் பெரும் செல்வப் பேறே
சகலகலா வல்லியே

9. சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை

நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பாதாம் புயத் தாயே
சகலகலா வல்லியே

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேம்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டெனும் விளிம்பிலுன் போற்றி
கண் கண்ட தெய்முளதோ
சகலகலா வல்லியே!

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாது அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாதி
அருள்வாயி அபிராமியே.

## கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும் -
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாழும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிருவடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய் தனைப்பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க

என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருத்தோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருவேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடி படி
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்றும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டெறி இத்துன்ப சேனையும்

எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாளென்னைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடலங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியுங் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ்சு ளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ்சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசுஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து

மைந்தன்னென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகி
கந்தர்சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நடமிடு வோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

# அமரர் திருமதி பாக்கியம் பொன்னையா அவர்களின் வாழ்க்கை வரலாறு

நெடுந்தீவு மேற்கில் தனிநாயகம் முதலி, இராமநாத முதலியார் வம்சாவழி வந்த ஐவர் கூட்டத்தில் ஒருவரான நாகப்பரினதும், சேதுப்பிள்ளையினதும் கடைசிப் புதல்வியாக பாக்கியம் (லட்சுமி அம்மா), 4 ம் வட்டாரம், சிறிகாந்தா வீதி, சாறாப்பிட்டி என்ற இடத்தில் 1932ம் ஆண்டு, ஆடி மாதம், 29ம் திகதி பிறப்பெய் தினார். இவர் கதிராசிப்பிள்ளை(அக்கா), முருகேசு (அண்ணா), சின்னப்பிள்ளை(அக்கா), வீராசிப்பிள்ளை (அக்கா) ஆகியோரின் கடைசித் தங்கையாக வாழ்ந்து வந்தார்.

நெடுந்தீவில் வாழ்ந்த பிரபல ஆசிரியர்களான ஆறுமுகச் சட்டம்பியார், குருவிச்சட்டம்பியார் போன்றவர்களிடம் ஆரம்பக் கல்வியைக்கற்று சிறந்த அறிவைப்பெற்றார். பின்பு 1948ம் ஆண்டு சாவகச்சேரியைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னையாவைத் திருமணம் செய்து, கணவரின் தொழில் சார்ந்து பூநகரியில் வாழ்க்கையைத் தொடர்ந்தார். அங்கு சந்திரமலர், பராசக்தி, லோகேஸ்வரி, தாமோதரன், செகநாதன், லலிதாசக்தி, குகநாதன், பாலகிருஷ்ணன்(காலம் சென்ற) என நான்கு பெண்பிள்ளை களையும், நான்கு ஆண்பிள்ளைகளையும் பெற்றெடுத்து, அத்தனை செல்வங்களுடனும் இன்புற்று வாழ்ந்து வந்தார். பிள்ளைகளை மட்டுமன்றி பெறாமக்களையும் நன்கு கவனித்து வந்தார்.

முதலில் தனது கணவரின் அண்ணையின் மகள் இராசம்மா, பொன்னுச்சாமியின் திருமணத்தை தனது வீட்டில் செய்து மகிழ்ந்து, "வாழவைத்த தெய்வம்" என்ற பெயரையும் பெற்றார். பின்பு தனது சகோதரியின் மகன் கதிரவேலு, பூரணத்தின் திருமணத்தையும், தனது மற்ற சகோதரியின் மகள் நாகேஸ்வரியின் திருமணத்தையும் தன் இல்லத்தில் செய்து மகிழ்ந்தார். பின் தனது மகள்மார் சந்திரமலர், பராசக்தி, லோகேஸ்வரி ஆகியோரின் திருமணத்தையும் அதே இல்லத்தில் நிகழ்த்தி மகிழ்வுற்றார். பிள்ளைகள், பேரப்பிள்ளையுடன் இன்புற்று வாழ்ந்து வருகையில், எதிர்பாராமல் வந்த சுகயீனம் காரணமாக 1968 ம் ஆண்டு தனது கணவரை இழக்க நேரிட்டது.

கணவரின் இழப்பின் பின்னர் பலத்த சோதனைகள் மத்தியில் தைரியமாகக் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். கடையோடும், கமத்தோடும் அத்தனை பிள்ளைகளையும் வழிநடத்தி, வளர்த்து, படிப்பித்து ஆளாக்கி, வெளிநாடு செல்வதற்கும் வழிவகுத்தார்.

பின்னர் பிள்ளைகளுடன் 1987ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார். தனது மூன்று ஆண்பிள்ளைகளின் திருமணங்களையும் முன்னின்று நடத்தி வைத்தார். அத்துடன் பேரப்பிள்ளைகளின் திருமணங்களையும் நடத்தி இன்புற்றார். 28 வருடங்கள் பிரான்ஸில் வசித்த காலத்தில், தனது பிள்ளைகள் இங்கிலாந்து சென்றபின் 19 வருடங்கள் தனியாகவும் வாழ்ந்து சாதனை படைத்தார். பின்பு இங்கிலாந்து வந்து மகன்மார்கள் தாமோதரன், ஜெகன், குகன் குடும்பங்களுடன் இரண்டு வருடங்கள் வாழ்ந்தார். பின்பு டென்மார்க் சென்று மகள் லலி குடும்பத்துடனும் வாழ்ந்தார். பின்னர் இலங்கை செல்ல ஆசைப்பட்டு, பிரான்ஸில் இருக்கும் தனது பேத்தி ஜசிந்தா அவரின் கணவர் குணராஜா பூட்டன், பூட்டிகளுடன் தான் பிறந்த ஊரை எத்தனையோ வருடங்களுக்குப் பின் சென்று பார்த்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். பின் சிறிது காலம் பிரான்ஸில் இருந்து, பின் டென்மார்க் வந்து, மீண்டும் தனது பழைய வாழ்க்கையை மகள் லோகேஸ்வரி, மருமகன் தர்மலிங்கத்துடன் பூநகரியில் ஒன்றரை வருடங்கள் வரை வாழ்ந்து, வேளாண்மையும் செய்து மகிழ்ந்தார்.

பின்பு மீண்டும் பிரான்ஸ் வந்து சிறிது காலம் தனது பேத்தி, குடும்பம், பூட்டப்பிள்ளைகளுடனும் வாழ்ந்து, அவர்களின் அன்பு, பாசம் கண்டு இன்புற்று வாழ்ந்தார். பின்னர் மீண்டும் இங்கிலாந்து வந்து தனது மகள் பராசக்தி, மருமகன் ஜீவரட்ணம், பேத்தி, பேரனுடன் வாழ்ந்து வருகையில், திடீரென ஏற்பட்ட சுகயீன காரணமாக 17ம் திகதி மாசி மாதம் 2018 அன்று லண்டனில் குறொய்டன் என்னுமிடத்தில் இறைபதம் எய்தினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்த சாந்தி

# 85 வருடம் 6 மாதம் 19 நாட்கள் சகாப்தம் பாக்கியம் (லட்சுமியம்மா)



நாகப்பர், சேதுப்பிள்ளைக்கு கடைசி மகளாக நெடுந்தீவில் பிறந்து வளர்ந்து, சாவகச்சேரியைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னையாவை மணமுடித்து, கணவரின் தொழில் காரணமாக பூநகரி சென்று, சமநீதியாக நான்கு பெண் குழந்தைகளையும், நான்கு ஆண் குழந்தைகயையும் பெற்று, வளர்த்து, படிப்பித்து ஆளாக்கி, மேலும் முன்னேற்றம் காண தனது பிள்ளைகளை வெளிநாடு அனுப்பி, பின் தானும் தனது பிள்ளைச்செல்வங்களுடன் இணைந்து, வெளிநாடு வராத இரு பிள்ளைகளின் பிள்ளைகளையும் (பேரப்பிள்ளைகள்) கூப்பிட்டு, பிரான்சில் கனகாலம் வாழ்ந்து, இங்கிலாந்து வந்து பிள்ளைகளுடன் வாழ்ந்து, டென்மார்க் சென்று கடைசி மகளுடன் வாழ்ந்து, பின் இலங்கை சென்று மூன்றாவது மகளுடன் வாழ்ந்து, தனது வயலில் விவசாயம் செய்து, மீண்டும் பிரான்ஸ் வந்து பேத்தி, பூட்டன், பூட்டிகளுடன் வாழ்ந்து, மீண்டும் இங்கிலாந்தில் இரண்டாவது மகள், பேத்தியின் பராமரிப்பில் வாழ்ந்து, 17.02.2018 அன்று குறொய்டனில் ஆத்மா சிவனடி சேர, 21.02.2018 அன்று புனித உடல் செந்தீயுடன் கலந்து சாம்பலாகி, 19.03.2018 அன்று இங்கிலாந்து கிங்ஸ்ரனில் தேம்ஸ் நதியில் கலந்து, சல சலவென மெல்லென நகர்ந்து சென்று, ஆங்கிலக்கால்வாயில் கலந்து, அத்திலாந்திக் சமுத்திரத்தில் சேர்ந்து, இந்துசமுத்தில் கலந்து, மீண்டும் நெடுந்தீவுக் கடலை உற்று நோக்கி சென்றடையும்.
இதுதான் சகாப்தத்தின் வட்டம்.

**மகன் செகநாதன் பொன்னையா**

## மூத்தமகள் சந்திரமலர் புலம்பல்

முத்தெனப் பெற்றாய் எனை மூத்தவளாக
பொத்தெனப் போனதேனோ அத்தனை சொந்தம்விட்டு
பத்துகிறது என்வயிறு உனைப் பக்கத்தில் காணாமல்
நித்தமும் உன்நினைப்பு, நித்தமும் உன்நினைப்பு

பட்டதுன்பம் நான் அறிவேன் எனைப்பார்க்க நிலம்வந்தாய்
உச்சி வெயிலும், பெத்தமனம் பித்தாக நீ வந்தாய்
எனைப்பார்க்க,
பெத்தவளுடன் பேரப்பிள்ளைகளும், தப்பாமல் கவனிப்பாய்
உன் கருணைதனை யார்அறிவார், நித்தமும் உனை நினைப்பேன்
உன் நிழலில் வாழ்ந்த, அத்தனை சொந்தங்களும்
உனை நினைக்கும்
அத்தனை உறவு முன்னும் அமைதியாய் தூங்கினாயே
பெற்றபிள்ளை, பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளை
அத்தனையும் நீ அணைத்தாய், உன்னை அவன் அழைத்தான்.
அம்மா எனக்கூற யார் உண்டோ இவ்வுலகில்
அமைதியாய் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்

சந்திரமலர்
(மூத்தமகள்)
(தாய்லாந்து)

## இரண்டாவது மகள் பராசக்தி புலம்பல்

### அம்மாவிற்கு அன்பு மடல்..

அம்மா நீங்கள் எனக்கு மிகப்பெரிய வழிகாட்டி. என்றும் என் மனதில் ஆழப்பதிந்த அரிய பொக்கிசம். பராசக்கி என்றால் ஆதிபராசக்தி என்பீர். நீங்கள் விரும்பி வைத்த பெயர். உங்கள் மடியில் நான் பிறக்க பெரிய தவம் செய்தேன் அம்மா. நினைத்துப் பார்க்கிறேன் உங்களின் அளப்பரிய ஆற்றலை. எங்களை இந்த உலகத்திற்கு காட்டி ஆளாக்கினீர்கள் அம்மா.
உங்கள் பொறுப்புகளை செய்து முடித்து, ஓய்வெடுக்கும் வேளையில் ஒவ்வொரு பிள்ளைகளிடம் சென்றீர்கள். நீங்கள் ஒழுங்கு முறையில் அட்டவணை போட்டு, திட்டமிட்டு செயற்பாடு செய்துள்ளீர்கள் என்று இப்போது நினைக்கும் போது புரிகிறது. பிள்ளைகளின் பராமரிப்பில் ஒரு குறையுமின்றி வாழ்ந்ததையிட்டு ஆண்டவனுக்கு நன்றி கூறி, உங்கள் கடைசிக்காலத்தை என் குடும்பத்துடன் சேர்ந்து கழித்தது, எங்களுக்கு ஒரு ஆத்ம திருப்தி. அம்மா நீங்கள் எங்களுக்குச் செய்ததெல்லாவற்றையும், நாங்கள் உங்களிடம் கடமைப்படக்கூடாது என்பதற்காக, உங்களுக்கு நாங்கள் கடமைகள் செய்ய கால, நேரம் தந்தீர்கள். நீங்கள் வந்து என்னுடன் இருந்த காலம், என் வாழ்க்கையில் நான் செய்த பூர்வ ஜென்ம புண்ணியமாகும். உங்களுக்குப் பணிவிடை செய்யும் போது, நான் கட்டிலால் விழுந்துவிடுவேனோ என்று, என்னை கட்டியணைப்பீர்கள் அம்மா. அதை என்னால் இப்பவும் உணரமுடிகிறது. என் கண்கள் கண்டதை நினைக்கும் போது கண்ணீர் மல்கிறது. நீங்கள் இவ்வுலகைவிட்டுப் போகும் போது, எந்தவிதத்திலும் கஸ்டப்படாமல், அமைதியாக விடைபெற்றதை, என் கண்முன்னே பார்க்கும் சந்தர்ப்பத்தை கடவுள் தந்தது எனக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியமோ பாக்கியம்.
அம்மா நீங்கள் மிகப்பெரிய அதிர்ஸ்டசாலி. வயோதிபர் இல்லம் செல்லாமல், உங்கள் வைத்தியரின் உதவியுடன், பெற்ற பிள்ளை இல்லம் சென்று, உங்கள் விருப்பத்திற்கேற்ப, சுத்தமாகவும், சுகாதாரதாரமாகவும் பெருமிதமாய் வாழ்ந்தீர்கள் அம்மா. பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளும் உங்கள் பாசத்தில் பணி புரிந்தார்கள். இதையெல்லாம் பார்த்து பூரித்துப்போனீர்கள் அம்மா. எங்கள் அம்சவேணியின் லட்சுமிகரமுகம் கண்முன்னே தெரிகிறது அம்மா. உங்கள் ஆதமா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

உங்கள் பாசமுள்ள
மகள் பராசக்தி ஜீவரட்ணம், இங்கிலாந்து

மூன்றாவது மகள் லோகேஸ்வரி புலம்பல்

அம்மா நாங்கள் உங்களோடு இருந்த காலத்திலிருந்து வெளிநாடு போகும் வரையும் நீங்கள் எத்தனையோ கஸ்டப்பட்டு, எங்களைக் கஸ்டப்படாமல் வளர்த்து, படிப்பித்து, ஆளாக்கிவிட்டு, எனது மூத்தமகனை வெளிநாட்டுக்கு கூப்பிட்டு, மூத்தமகளுக்கு திருமணம் செய்து வைத்து எங்கள் குடும்பத்தை உயர்த்திய குலவிளக்கு நீங்கள் அம்மா.

உங்களின் எல்லாப்பிள்ளைகளையும், மருமக்களையும், பேரப்பிள்ளைகளையும், பூட்டப்பிள்ளைகளையும் ஒரேமாதிரி சமமாகப் பார்த்து வந்த எங்கள் தெய்வத்தாய் நீங்கள். எங்கள் எல்லோருடைய மனதிலும் என்றென்றும் குடியிருக்கும் கோயிலாக இருப்பீர்கள் அம்மா. நாங்கள் உங்களை எப்பொழுதும் எங்கள் தெய்வமாகப் பார்த்துக்கொண்டேயிருக்கிறோம்.


உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும் அம்மா.

உங்கள் பிரிவால் வாடும் மகள்

லோகேஸ்வரி தர்மலிங்கம்

(மூன்றாவது மகள்)

(இலங்கை)



## மூத்த மகன் தாமோதரன் புலம்பல்

என் தாயே!
தாய்க்குத் தாயே!
தாயுருவில் தந்தையே!

எனக்கு நோய் போக்கி
அறியாமை களைந்து
பாடொணாப் பாடுபட்ட என் அம்மா,

ஆணிவேராய், பெருவிருட்சமாய் தாங்கிய தைரியமே!
தடைகள் யாவும், தனித்து நின்று,
தகர்த்தெறிந்த, வீராங்கனை நீ அம்மா!
பேரொளியே! என் நம்பிக்கையே!
என் உறுதுணையே அம்மா!

உங்கள் ஸ்பரிசம்,
கருணை உள்ளம்,

தாராள சிந்தை,
சமநீதி தர்மம்,
கலை ரசனை,
இவை யாவும் என்னுள் சங்கமித்துள்ளது அம்மா!

உங்கள் தெய்வீக ஆத்மா, எம்பிரான் திருவடியில்
இளைப்பாற, நான் அனுதினமும் பிரார்த்திக்கிறேன்
என் அம்மா

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மூத்த மகன்
தாமோதரன்
(லண்டன்)

## இரண்டாவது மகன் செகநாதன் புலம்பல்

அம்மா, அம்மா, அம்மா என்று தொடங்கிய அம்மா எனது 59 வருட வாழ்க்கையில், 50 வருடங்கள் எம்மை வளர்த்து ஆளாக்கி கொண்டு சென்றீர்கள் அம்மா. சிறுவயதில் உணராத தாய்ப்பாசத்தை, இந்த வயதில் உணர்கிறேன். நீங்கள் இருக்கிறீர்கள் என்ற இறுமாப்பில் உணராமல் இருந்தேனோ அம்மா! இப்போ எல்லாவற்றையும் இழந்தவனாக உணர்கின்றேன் அம்மா! பிறப்பிருந்தால் இறப்பிருக்கும் என்று உணரும் வயதில் இருந்தும், என் மனம் உங்கள் பிரிவை ஏற்க மறுக்கிறது அம்மா! ஜெகம், செகம், சட்டநாதி, செகநாதன் என பலபெயர்கள் சொல்லி அழைப்பீர்களே அம்மா! சிறுவயதிலிருந்து நீங்கள் சொல்லித்தந்த பழமொழிகள், தேவாரங்கள் எத்தனையோ, அந்த நேரத்தில் செவிமடுத்துக் கேட்காமல் இருந்த எனக்கு, இன்று என் காதில் ரீங்காரமாக ஒலிக்கிறது அம்மா!

நான் செய்யும் சிறு குழப்படிகளுக்கு, என் இரு கைகளையும், உங்கள் ஒரு கையால் பிடித்துக்கொண்டு கண்டிப்பீர்கள். அந்தக்கண்டிப்பு இனிமேல் எப்போது கிடைக்கும் அம்மா! நீங்கள் எனக்குக் கற்றுத்தந்த பாடங்கள் பல. அதில் இரண்டை நான் இன்னும் கடைப்பிடிக்கிறேன். ஒன்று எவரிடமும் நீ கோபமாகப் பேசினாலும், அன்று அல்லது அடுத்த நாளோ அந்த கோபத்தை மறந்து பழக வேண்டும். இரண்டாவது மற்றவர்கள் தவறு செய்தாலும், அவர்களை எமது இடத்தில் வைத்துப் பார்த்து மன்னித்துவிட வேண்டும். அம்மா நீங்கள் எனக்கு அம்மா மாத்திரமல்ல, ஆசானும் கூட. இப்படி தொடர்ந்துகொண்டே போகலாம் உங்கள் புலமை பாடி. என் மனதில் உங்கள் நினைவு, என்றும் நீங்காத அலைகளாய்...

உங்கள் ஆத்மா சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகிறேன் என் குடும்பத்தோடு.

உங்கள் மனதோடு உறவாடும்..

அன்பு மகன்


செகநாதன், இங்கிலாந்து

(இரண்டாவது மகன்)



உ

## நெடுந்தீவு மேற்கு
## வம்சாவழி : தனிநாயகமுதலி, இராமநாதமுதல
## வழித்தோன்றல்



உ
ந்தீவு மேற்கு
யகமுதலி, இராமநாதமுதலி
ித்தோன்றல்

- ஐவர் கூட்டம்
  - ஐயம்பிள்ளை
  - கந்தப்பர்
  - வேலாயுதபிள்ளை
  - நாகப்பர் + சேதுப்பிள்ளை
    - கதிராசிப்பிள்ளை
    - முருகேசு
    - சின்னப்பிள்ளை
    - வீராசிப்பிள்ளை
    - பாக்கியம்
  - சின்னத்தம்பி

- ஸ்வரி + ிங்கம்
- தாமோதரன் + அமுதகௌரி
  - ஆரண்யா, ஐங்கரன், கார்த்திகன்
- செகநாதன் + மீனலோசினி
  - கீர்த்தனா + பிரதீபன், அம்சனா, வருணி
- லலிதாசக்தி + பரந்தாமன்
  - தீபன், மெலனி
- குகநாதன் + குமுதினி
  - விபூசன், வேர்ஜினி
- பாலகிருஷ்ணன் (அமரர்)

- சுரேஸ் + அன்மரியா
  - ஸ்ரீவன், ஜேம்ஸ், ஆரொன்
- ஜசிந்தா + குணராஜன்
  - அபர்ணா, அனோஜன், அஸ்வினா
- சுஜிதா + ரமேஸ்
  - பிரித்திகா, அக்ஷயன்
- ரமணன் + சுஜிக்கா
  - சருண், சருணி, அரிஷ்
- சோபிதா + அரவிந்தன்
  - ஆதிசன், அக்ஷிதா

அம்மா...

மெலிந்த உடல், நெற்றியில் திருநீற்றுக்குறி, கனிந்த பார்வை, கண்ணியமான பேச்சு, கறார் என்ற முடிவு, தூரமான சிந்தனை, சொந்தங்களைத் தொலைக்கக்கூடாது என்ற பிரார்த்தனை. நீங்கள் பாக்கியம். இது நாங்கள் செய்த பாக்கியம், யோக்கியம் அதுதான் உங்களுக்கு முக்கியம். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இதுவே உங்களின் வாக்கியம். நினைக்கிறோம் உங்களை நாங்கள் தினம், தினம். அந்த நினைவுகளே எங்களின் பொக்கிசம்.

இருப்பீர்கள் எங்களோடு என்றென்றும் லட்சுமி அம்மா. உங்கள் வயிற்றில் நாம் பிறக்க என்ன தவம் செய்தோம். அம்மா நீங்கள் ஒரு சொல் மந்திரம். உங்களைப்பற்றி எழுதினால் தொடரும் காவியம். நீங்கள் எங்கள் மனக்கண்ணில் உயிருள்ள ஓவியம். பாக்கியம். இது ஒற்றைச் சொல் சரித்திரம்.

திசை தெரியா பறவைகளுக்கு நீங்கள் வேடந்தாங்கல். பெற்ற பிள்ளைகளைவிட பெறாத பிள்ளைகள் கூட உங்களுக்கு. உற்றார், சுற்றார், உறவினர் சுகமறிய ஆவல். மற்றவர் பற்றி குறை சொன்னால் வரும் கோபம் உங்களுக்கு.

வந்தோரை வரவேற்கும் பாங்கு, வசை பாடுவோர்க்கும் வயிராறக்கொடுப்பீர். விரோதம் கொண்டோர்க்கும் விருந்து வைத்து அனுப்பி வைப்பீர். பணம் அறிந்து பழகுவதில்லை. நீங்கள் அவர்கள் மனமறிந்து பழகுவீர். தெரியாமல் பிழை செய்தோர்க்கும் திருந்த இடம் கொடுப்பீர். மறை நூல் மன்னிப்பு என்பீர். குறை ஒன்றும் இல்லை உங்களில், அதனால் நிறைவாக இருப்பீர் எல்லோர் நெஞ்சாங்கூட்டில். பிஞ்சு வயதிலிருந்தே தந்தையும், தாயும் நீங்கள். நெஞ்சு பொறுக்குதில்லை எங்கள் அருகில் நீங்கள் இல்லை என்று நினைக்கும் போது. எங்களைக் கொஞ்சி வளர்த்த உங்களைக் கொஞ்ச நினைக்கிறோம். நெஞ்சுதான் கனக்கிறது நீங்கள் இல்லையே என்று நினைக்கும்போது. உலகத்தையே காட்டினீர்கள் அம்மா எங்களுக்கு, இனி உங்கள் உருவத்தையே காணமுடியவில்லை இந்த உலகத்திலே அம்மா.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழோடு, சிந்தனைக்கு சிறுகதைகளும், புதுமையான பழமொழியும் இருத்தி வைத்துச் சொல்லித்தருவீர்.

படாத பாடுகள் எல்லாம் பட்டு, காடு வெட்டித் தோட்டமும் செய்தீர்கள், கடையும் வைத்து காப்பாற்றினீர்கள் எங்களை. கமமும் போகத்தில் செய்வீர்கள், காலநிலை சரியில்லை என்றால் விதைத்த நெல்லும் வந்திடாது. பணத்தையல்ல மனபலத்தைத் திடப்படுத்தி மறுபடியும் செய்திடுவீர்கள். எங்களுக்காக விழுந்து, விழுந்து எழுந்தீர்கள் அம்மா நீங்கள், விபரம் தெரியா எங்கள் வயதில்.

''பசிக்கிது அம்மா பசிக்கிது'' இது எங்கள் தினப்பாட்டு. சாப்பாடு இல்லையென்று சொன்னதில்லை நீங்கள். முசுட்டை இலைச் சொதியும், கொவ்வை இலை வறையும், பிரண்டந்தண்டை பிரட்டி வைத்த குழம்பும் இயற்கை தந்ததை, இயற்றி நீங்கள் தந்ததென நாங்கள் நினைத்தாலும் இனிக்குதம்மா இன்னும் எங்கள் நாக்கில், ருசிக்குதம்மா உங்கள் சமையல் மணம் எங்கள் மூக்கில்.

கஸ்டப்பட்டோம் என்று நாங்கள் வெட்கப்படவில்லை அம்மா. வீரியமாக எங்களை வளர்த்தீர்கள் என்று வீம்பாக இருக்கிறோம் அம்மா. கை நீட்டி வாங்காமல், கடனிலே வாழாமல் கண்ணியமாக வாழ்ந்தீர்கள் அம்மா. இறுதிச்செலவுக்கும் இருக்கிறது பணம் என்று எடுத்துத் தந்தீர்கள் அம்மா. இதை நினைத்தால் நீங்கள் ஒரு இலட்சியப்பிறவி அம்மா.

உப்புத்தண்ணீர் கரையில் உவர்ப்பான வாழ்க்கை நீங்கள் வாழ்ந்தீர்கள். உங்களுக்காக நீங்கள் வாழவில்லை. எமக்காக நீங்கள் கரைந்தீர்கள். ஏழுபிள்ளை நல்லதங்காள் இல்லை அம்மா நீங்கள், ஏழு பிறப்பிலும் நீங்கள் தான் எங்கள் அம்மா.

இல்லை என்ற சொல்லே எங்களுக்கு இல்லை. எல்லாமே இருக்கு என்று இன்பமாக வாழ்ந்தோம். இங்கே இப்போ நீங்கள் இல்லை என்று நினைக்க முடியவில்லை எங்களுக்கு. அம்மா இருப்பீர்கள் எங்களுக்குள் நீங்கள் என்றும்.
பெருமளவில் பொருள் இல்லை என்றாலும், பிள்ளைப்பங்கு பிறித்திடுவீர் எல்லோருக்கும். சமநீதி உங்கள் தாரகமந்திரம். வரமொன்று தருவீர்களா அம்மா மறுபடியும் உங்கள் மடியில் நாங்கள் பிறக்க.

கடைசி நேரம்...

பார்த்திருந்தேன் அம்மா கழுத்தில் துடிக்கும் நாடிதனை பல நாட்களாக. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் உங்களைச்சுற்றிப் புடை சூழந்து நிற்க, பரந்தாமன் வந்து பாசமாய் அம்மா என்று காதில் சொல்ல, வேஜினியும் வந்து அப்பம்மா என்று மெல்ல காதில் பரிவாகச் சொல்ல, அவர்களுக்காக காத்திருந்தது போல், இனித் தாமதம் ஏன் என்று சொல்லி, விடை பெற்றீரோ எங்களை விட்டு.

சொர்க்கத்தின் வாசல் திறந்தேயிருக்கிறது உங்களுக்காக, தடைகள் இல்லையம்மா தாராளமாய் செல்லுங்கள். உங்கள் வரவு பார்த்துக் காத்திருக்கிறார் எட்டாவது கடைக்குட்டி, பாலகனாய் சென்ற பாலகிருஸ்ண பிள்ளைஅம்மா. ஐம்பது வருடக்கதைகளை ஆற, அமர இருந்து அழகாகச் சொல்லுங்கள் ஐயாவுக்கு.

இன்னும் சொல்ல நினைக்கிறேன் முடியவில்லை அம்மா... எங்கள் இதயத்துடிப்புடன் இணைந்திருப்பீர்கள் நீங்கள் அம்மா, நாங்கள் இருக்கும் வரை. இறைவனிடம் கேட்கிறோம் எங்கள் அம்மாவின் ஆத்மா சாந்திக்காக.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

உங்கள் நினைவுகளோடு...

மகள் லலிதாசக்தி பரந்தாமன், டென்மார்க்.

கடைசி மகள்



## அம்மாவும் நீயே அப்பாவும் நீயே

சிறியவனாய் உனதருகே நான் தூங்க,
சிறுகதைகள் பலசொல்வாய் நமக்கு நீயும்
உன் துன்பம் நானறிவேன் என் பிஞ்சு வயதினிலே
தலைமாட்டில் கத்தியுடன் தயக்கமின்றி படுக்கை செல்வாய்
நித்திரை நீ கொண்டு நான் கண்டதில்லை
அத்தனை தேவாரமும், அடுக்கடுக்காய் பாடிடுவாய்
ஏழு பிள்ளை நல்லதங்காள் என்றென்றால் கூறிடுவாய்
கொட்டும் மழையினிலும், மூசும் பனியிலும், பாம்பு, பட்சியுடன்
பயந்து நாம் படுக்கையில் தயங்காது கதைசொல்லி
தைரியத்தை ஊட்டிடுவாய்

அள்ளிக் கொடுப்பது உன் அருமைத்தொழில்
அளவுச் சாப்பாடு அன்றுமுதல் இன்றுவரை
பச்சை இலையென்றால் பறித்தெடுத்துச் சமைத்திடுவாய்
எதிர்பார்ப்பு என்பது எள்ளளவும் இல்லையம்மா
தன்னம்பிக்கை தளராமல் வைத்திருப்பாய்
அந்நம்பிக்கையை நமக்கும் விதைத்தாய்

சொந்தம் எப்போதும் தொடர்கதை என்பாய்
அத்தனை சொந்தங்களையும் அன்போடு அரவணைப்பாய்
விருந்தோம்பல் என்பது உன் உதிரமம்மா
உன் வீட்டில் உண்ணார் யாருளரோ
பத்திரமாய் பதம் பல சொல்வாய்
முருங்கை வறையும், சுறாவுடன் ஒடியற்பிட்டும்
வகைவகையாய் வறுத்திடுவாய் வாயே ஊறுதம்மா
இத்தனை சுவைதனை நாம் இனி எங்கு சுவைப்போம்

படுக்கையில் இருக்கையிலும் பாசமாய் கேட்டிடுவாய்
தம்பி, பிள்ளை சாப்பிடெண்டு, என்று நாம் கேட்போம்
இவ் இனிய வார்த்தைகளை, வெற்றுப் பாத்திரமாய்
வெறிச்சோடி நிற்கின்றோம்.

இத்தனை நாளும் எம்முடன் இருந்தாய் இனி நாம்
உனை எங்கு காண்போம்
அத்தனை பிள்ளைதனை அன்போடு பார்த்து வந்தாய்
பெத்தபிள்ளைகளுடன் பேரர், பூட்டர்களையும் முத்தாக
முகர்ந்தாயே உன் முதுமைக் காலத்தில்
எனைப் பெற்ற அம்மாவே எங்கு நீ சென்றாயோ?
சொர்க்கம் தான் சென்றிருப்பாய் சந்தேகம் எதுவும் இல்லை
ஜென்மம் ஒன்றிருந்தால் என்றும் உன் மகனாவேன்.

உன் ஆத்மா சாந்தியடைய நித்தமும் உனைப் பிரார்த்திக்கின்றேன்

**மகன் குகன் (லண்டன்)**

## மருமகன் ஜீவரட்ணம் புலம்பல்

தாய்க்கு தாயான என் அன்பான மாமியே
உங்களின் ஒரு சில வார்த்தைகள் சிறு புன்னகை
என்று நான் காண்பேன். ஏன் இந்த அவசரம்
என் வீட்டில் உங்கள் பிற்காலம், மகள் பேத்தியுடன்,
எனது தாய்க்குச் செய்யாத கடமைகளைச்
செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்ததில் மிகவும்
மன ஆறுதல் அடைகின்றேன்.
உங்கள் இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது.
எங்கள் வீடு வெறிச்சோடி விட்டது. உங்கள்
ஆசீர்வாதம் என்றும் நமக்குண்டு. உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

**மருமகன் ஜீவரட்ணம்**

## மருமகன் தர்மலிங்கம் புலம்பல்

அன்பான மாமி..

எனது அம்மாவை இழந்த எனக்கு, உங்களைக் கண்டநாள் முதல் உங்களையே என் அம்மாவாக நினைத்து வாழ்ந்தேன்.

உங்கள் மகள் லோகா உங்களோடே வாழ்ந்தபடியால், உங்களுடன் நீண்டகாலம் சேர்ந்து வாழ எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. என்னை மருமகனாகப் பார்க்காமல் ஒரு மகனாகவே பார்த்தீர்கள்.

நீங்கள் எங்களுடன் இங்கு இருந்தபோது எவ்வளவு சந்தோஷமாகப் பூநகரிக் காற்றை சுவாசித்துக்கொண்டிருந்தோம். என் சமையலை நீங்கள் ருசித்து சாப்பிடுவதைப் பார்த்து நான் ரசிப்பேன்.

என்வளர்ப்பு பிராணிகள் என்னை வந்து அளைந்தால், அல்லது நான்அந்த நாய்க்குட்டி, பூனைக்குட்டியுடன் இருந்தாலும், உங்களுக்கு அறவே பிடிக்காது. அதற்கு நான் ஒருபோதும் உங்களில் கோபப்பட்டதில்லை. உங்களின் சுத்தத்திற்கு அவை தடையாக இருந்தது என்று எனக்கு தெரியும். அதனால் உங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்காக என்னை மன்னிக்கவும்.

நீங்கள் இங்கிருந்து போன பின் உங்களின் கலகலப்பின்றி எங்கள் வீடு வெறிச்சோடிப்போய் இருக்கிறது. உங்களைத் தினம், தினமும் நினைக்கிறோம்.
உங்கள் கட்டிலும், கதிரையும் இப்போ எனக்குத்தான் சொந்தம். உங்கள் கட்டிலில் தான் நான் உறங்குகிறேன். நீங்கள் லோகா.. லோகா.. என்று கூப்பிடும் சத்தம் தான் இங்கு எங்கும்

ஒலித்துக்கொண்டிருக்கிறது. உங்கள் பிரிவு எங்களை வாட்டுகிறது. எங்களால் நம்பமுடியவில்லை.ஆண்டவன் அருளால் உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

**உங்கள் அன்பு மருமகன் தர்மலிங்கம்.**

இலங்கை

## எனக்குத் தெரிந்த, நான் நேசித்த அன்பு அம்மா

எனக்கு லலியைத் தெரியும் முன் என் மாமியைத் தெரியும், மாமியாக அல்ல, என் நண்பனின் அம்மாவாக.

சாவகச்சேரியில் இருந்த எனக்கு பூநகரி ஒரு புது இடம். கடுமையான வெப்பம் ஆனாலும் ஒரு குளிர்மையான வரவேற்பு அங்கிருந்தது. என்னைக் கண்டதும் அம்மா வாங்கோ தம்பி என்று வரவேற்றா. ஒரு தேநீர் குடித்துவிட்டு வீடு வந்தேன். இப்படித்தான் வந்தது அந்த உறவு.

இன்னும் ஒரு தடவை காலை வேளை சென்ற போது தோசை சுட்டுத்தந்தா. வித்தியாசமான தோசை. ஒரு நாளும் அப்படி நான் சாப்பிட்டதில்லை. அது இன்னும் ஞாபகமாக இருக்கிறது. மெல்ல மெல்ல பழகத்தொடங்கி இன்று அவர்கள் வீட்டில் ஒரு அங்கத்தவனாக இருக்கிறேன். முதல் முதல் தேநீர் தந்தா, பிறகு லலியை அவா தராமலே எடுத்துக்கொண்டேன்.

எனக்கு அவவில் மதிப்பும், மரியாதையும் உண்டு. எங்கள் வீட்டில் அவ வந்திருக்கும் காலங்களில், எனக்கும் லலிக்கும் ஏதும் முரண்பாடு வந்தால், என்னோடு அவ சேர்ந்து விடுவா. லலிக்கு படுதோல்வி. அதேபோல் லலிக்கும் அம்மாவிற்கும் வந்தால், நான் அவவின் கட்சி, அப்பவும் லலிக்குத் தான் தோல்வி.

நான் மாமியென்று அவாவை ஒரு நாளும் கூப்பிட்டதில்லை. அவ எனக்கு இன்னுமொரு அம்மா. இப்படி எல்லோருக்கும் கிடையாது. மாமி என்றவுடன், ஆமியும், சுனாமியும் அல்லது சின்னத்திரை மாமிமார்கள் நினைவிற்கு வரும். ஆமி என்றால் தொடர்ந்து தாக்குவார், சுனாமி என்றால் எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு போய்விடும். ஆனால் இந்த மாமி வரம் கேட்காமலே கொடுக்கும் சாமி. அப்படிக் கொடுத்த வரம் தான் எனக்கு கிடைத்த லலி.

அன்பு, அறிவு, சாந்தம், மனத்துணிவு, ஆளுமை, அதிகாரம், பொறுமை, இரக்கம், ஒருவரை எடை போடும் தன்மை, முற்போக்கான

சிந்தனை, மூடநம்பிக்கை அறவேயில்லை. இவ்வளவும் சேர்ந்த ஒரு கலவை. பட்டங்கள், பரிசுகள் பெறாத பட்டதாரி. அருளிலே மகாலட்சுமி.

சுள்ளென்று கோபம் வரும், ஒரு நொடியில் அதை மறந்து சாந்தமாக வரும் சுபாவம். பாஷை ஒரு தடையல்ல அவாவிற்கு, மொழி தெரியாமலே மற்றவர்களுடன் உரையாடும் திறன் இருக்கு. அவாவில் நான் அவதானித்தது வஞ்சம் தீர்க்கும் எண்ணம், வசை பாடும் குணம் கொஞ்சமும் இல்லை. அது பூச்சியமே.

சுலபமாகப் பகிடிகளைப் புரிந்துகொள்ளும் தன்மை இருக்கு. வயது வேறுபாடு இல்லாமல் பழகும் குணமிருக்கு. இடத்திற்கேற்றபடி தன்னை மாற்றிக்கொள்ளுவா. "விரலுக்கேற்ற வீக்கம்" போல வாழவேண்டும் என்று அடிக்கடி கூறுவா. ஆடம்பரம், அட்டூழியம் பிடிக்காது அவாவிற்கு.

அம்மாவிற்கு சில ஆசைகள் இருந்தது. அது நிறைவேற சந்தர்ப்பம், சூழ்நிலை இடம் கொடுக்காததால், நிலைமைக்கேற்றபடி தனது அட்டவணையை மாற்றிக்கொண்டா. எல்லோர் மனதையும் இலகுவாகக் கவர்ந்திடுவா. ஒரு முறை கண்டவரையும் ஒரு நாளும் மறக்கமாட்டா. காதும், கண்ணும் நல்ல கூர்மை. நித்திரையாக்கும் என்று நாங்கள் நினைத்து ஏதும் மெதுவாகக் கதைத்தால் மறுமொழி உடனே வரும். செயல்களில் நல்ல நேர்த்தி, அதை செய்து முடிப்பதில் ஒரு பூர்த்தி. மற்றவர்களுக்கு கொடுப்பதில் பெரும் திருப்தி. உடல்சுத்தம் மட்டுமல்ல, உளச்சுத்தமும் தன் உடமையாகக் கொண்ட புண்ணியவதி.

எனக்கு நீங்கள் லலியை மணமுடித்ததால் மாமியார்
அன்பில் அம்மா
அறிவுரை சொல்வதில் ஆசான்
விவாதத்தில் எதிர்க்கட்சி
இன்பம், துன்பம் பரிமாற்றலில் நண்பி
என் நகைச்சுவைக்கு நீங்கள் விசிறி
உங்கள் சிந்தனைக்கு நான் பக்தன்
மொத்தத்தில் நீங்கள் எங்கள் எல்லோர்க்கும் ஒரு முன் மாதரி

உங்களைத் தினம் நினைக்கும்..

**ஒரு கணப் பக்தன் பரந்தாமன்,**

டென்மார்க்



## மருமகள் கௌரி தாமோதரன் புலம்பல்

மருமகளாக வந்த என்னை
மகளாக ஏற்றீர்கள் மாமி
உங்கள் பிரிவு என்னை மீளாத்துயரில் வாட்டுகிறது
இருந்தாலும்.....
உங்கள் அறிவுரைகள்
பிள்ளை என்று அன்புருக அழைக்கும் பாசம்,
நீங்கள் புகட்டிய வாழ்க்கையின் தத்துவம்,
இவற்றின் உணர்வுகளோடு
உங்கள் உள்ளம் போல் நாம் நன்கு வாழ்வோம் மாமி.

உங்கள் புனித ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



மருமகள் -
கௌரி தாமோதரன்

## மருமகள் மீனா புலம்பல்

அன்பு மாமி 1988ல் உங்களை கண்டநாள் முதல் இன்றுவரை முப்பது வருடங்கள் மாமியாக மட்டுமல்ல தாயை இழந்த எனக்குத் தாயாகவும் இருந்தீர்களே, உங்களிடம் நான் கற்றவை பல, எதுவுமே சமையல் தெரியாத எனக்கு அத்தனை சமையலும் பழக்கினீர்களே, நீங்கள் சொல்லிக் கொடுத்த அழகு தமிழைத்தானே என் பிள்ளைகள் அழகாகப் பேசுகின்றார்கள், இன்ச விடுங்கோ பிள்ளை நான் கொடுக்கின்றேன் சாப்பாடு என்று அன்பாக என்பிள்ளைகளுக்கு ஊட்டிவிடுவீர்கள், ஒரு தேத்தண்ணி தாரும் பிள்ளை என்று அன்புடன் கேட்பீர்கள், உங்கள் அறிவுரைகள் பல இன்றும் என்மனதில் உள்ளன. என்றும் உங்கள் ஆத்மா இறைவனடி பற்றியிருக்க உங்களை அழைத்த இறைவனை வேண்டுகின்றேன்,

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் அன்பு மருமகள் மீனா
(செகநாதன் மீனலோசினி)

## மருமகள் குமுதினி புலம்பல்

"மாமி எங்கள் ஒளி விளக்கு"

உங்கள் வீட்டுக்கு வந்த மருமகளில் நானும் ஒருத்தி,
மாமி எனக்கு அதில் மாபெரும் மகிழ்ச்சி
பேர்சொல்லி அழைப்பதில்லை என்னை பிள்ளை பிள்ளை என்பாயே
பிள்ளை என்ற வார்த்தை ரீங்காரமாய் ஒலிக்கின்றதே
பரிதவிக்க நம்மை இன்று பாரினில் விட்டதேனோ?
இயலாத போதினிலும் என்குரல் கேட்டால்
எழுந்திடுவாய் நீ உன் தலைதூக்கி
கடமைப் படுவதில் துளிகூட இஷ்டமில்லை
துவைக்கக் கூட துணி தரமாட்டாய்
மதிப்பதில் நீயும் ஒரு மாணிக்கம் மாமி
உன்னிடம் கற்றது நான் உலகளவு
சமயம் முதல் சம்பிரதாயம் வரை
பண்பு முதல், பணிவு வரை, பிள்ளை வளர்ப்பு வரை
உனக்கென்று தனித்தன்மை எப்பொழுதும் உள்ளதம்மா

உன் தமிழ் கேட்டு என்பிள்ளை வளர்ந்ததே
செந்தமிழ் கதைப்பான் என் மைந்தன் உன்குரல் கேட்டு,
உருக்குலைந்து போனோம் உன் மறைவு கேட்டு
கண்மூட முன்னோ கடல் கடந்து வந்தாள்,
என் பிள்ளை உனைப்பார்க்க
காத்து நீ நின்றாயோ, காலனிடம் செல்ல
கதி கலங்கி நிற்கின்றோம் காணாமல் உன்னை
எங்கு நீ சென்றாயோ?

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மருமகள்
**லக்கி (குமுதினி)**



## மூத்த பேத்தி விஜிதா புலம்பல்

சின்னவயதிலே தாலாட்டி, சீராட்டி வளர்த்தாய் என்னை
உன் பேத்தி நானும் உறங்குவேன் உன்னோடு
ஏழோடு எட்டாக என்னையும் வளர்த்தாயே..
எனக்கு நீ என்றும் அம்மாவே..
அம்மம்மா என்று கூப்பிடாமல்
அம்மா என்று கூப்பிட்டே வளர்ந்த பேத்தி
குழந்தை வயதிலே நான் உந்தன் செல்லம்
மூத்த பேத்தியென்றோ எனக்கு முதல் மரியாதை

கை பிடித்து நடக்க வைத்தாய்.. நீ என்றும் என்னைக் கை விட்டதில்லை
கூடவே என்னையும் கூட்டிவந்தாய் வெளிநாடு
உன்னை நான் மறப்பேனோ..
என் பிள்ளை உன் பூட்டி உனைப் பார்க்க வந்தாளே..
உறக்கத்திலும் உன் தலை அசைத்தாயே உன் உறவு கண்டு
நெஞ்சு பொறுக்குதில்லை நீ நெடுந்தூரம் போனதேனோ..
உன் குஞ்சுகள் துடிக்கின்றது.. உன் பிரிவைத் தாங்காமல்..
உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கும்

மூத்த பேத்தி விஜி (கனடா)

## பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

அம்மம்மா உங்களை எங்களால் மறக்கமுடியாது. நாம் சிறு வயதில் உங்கள் மடியில் தவழ்ந்து விளையாடினோம். உங்கள் சேலையை நித்தமும் போர்த்துப் படுப்போம். நீங்கள் வெளிநாடு சென்று விட்டாலும் எங்கள் மேல் மிகவும் கருணையுடன் பல உதவிகள் செய்வதை நாம் ஒரு போதும் எப்போழுதும் மறக்க முடியாது. தாயகம் வரும்போதும் எப்பொழுதும் அன்பாக எங்களைக் கண்டு மகிழ்வீர்கள். உங்கள் புன்னகை ததும்பும் முகத்தை நாம் எங்கு காண்போம். என்றும் உங்கள் ஆசீர்வாதம் எமக்குண்டு, ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பேரப்பிள்ளைகள்
சதீஸ், கவி, மதுரா, பாமா, (சந்திரமலர் மகாலிங்கம்)
பூட்டர்கள்
பாலமுரளி, பாலசங்கர்



## Tribute from Grand children

Grandma, your life was full of loving deeds, forever thoughtful of our needs. Today and tomorrow, my whole life through,
I will always love and cherish you.
Your loving granddaughter
**Kavitha Baskaran**

பேரப்பிள்ளைகள் புலம்பல்
<u>அம்மம்மா</u>

அம்மம்மா எல்லோரையும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் எப்பொழுதும் சரி சமனாகப் பார்த்து நடப்பா.அம்மம்மா தனது நடவடிக்கைகளை அட்டவணை போட்டு, திட்டமிட்டு செயற்படுத்துவதில் மிகவும் திறமைசாலி.

உங்களிடமிருந்து நிறைய நல்ல விடயங்களையெல்லாம் நாங்கள் விரும்பிக் கற்றுக்கொண்டோம்.

உங்களின் செயல்கள் எல்லாம் அனைவரும்
பின்பற்றத் தகுந்த நல்ல முன் உதாரணங்கள்.
எங்களுடைய அம்மம்மா ஒரு சிறந்த "***<u>Role model</u>***".
எல்லோருக்கும் அவா ஒரு முன்மாதிரியான எடுத்துக்காட்டு.

அம்மம்மாவை வைத்துப் பார்க்க எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.நீங்கள் எங்களிடம் வந்து, நாங்கள் உங்களைப் பராமரித்ததை சிறந்த ஒரு கொடுப்பனவாக ஏற்று, எங்கள்மனம்நிறைந்து, சந்தோசப்படுகின்றோம்.


அம்மம்மாவின் சிரிப்பொலி காதில் கேட்டுக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல், "பிரியாம்மா கொஞ்சிவிடுங்கோ"என்று என்னைக் கேட்டதும் இப்போதும் காதில் ஒலிக்கிறது அம்மம்மா!! உங்களின் சிரித்த முகம் அப்படியே எங்கள் கண்ணுக்குள்ளேயும் நிலைத்து நிற்கிறது.அம்மம்மா.. நாங்கள் உங்களை மிகவும் அன்பாக நேசிக்கிறோம்.

**We love you very much.**
உங்கள் அன்பு மிகுந்த..
பேரப்பிள்ளைகள் ஜீவப்பிரியா, சக்தீஷ் (பராசக்தி ஜீவரட்ணம்)

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

**எங்கள் அன்பு மிக்க அம்மம்மா**

உங்களோடு தான் எங்கள் வாழ்க்கை ஆரம்பமானது. நாங்கள் அனைவரும் உங்கள் வீட்டிலேயே பிறந்து, உங்கள் அரவணைப்பிலேயே வளர்ந்து, உங்களுடனேயே எப்பொழுதும் ஒட்டிக்கொண்டிருந்தோம்.
அம்மம்மா நீங்கள் வெளிநாட்டிற்கு வந்த பின்பு, எங்கள் குடும்பத்தையும் உயர்த்திவிட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் உங்கள் பேரப்பிள்ளையை வெளிநாட்டுக்கு அழைத்து, உங்களிடம் சேர்த்தீர்கள்.
எங்களுக்கு நல்ல வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்று, எங்களின் திருமணங்களிலும் அக்கறை கொண்டு நடத்தி வைத்தீர்கள்.
நீங்கள் எங்களுக்கு செய்த உதவிகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.



உங்களை நாங்கள் ஒரு போதும் மறக்கமாட்டோம். அம்மம்மா உங்களை எங்கள் நெஞ்சினிலே உயிருள்ள ஓவியமாகப் பதித்து வைத்துள்ளோம்.

சிறுவயதிலிருந்து உங்களையே சுற்றிச் சுற்றி திரிந்த எங்களுக்கு, நீங்கள் இல்லாமல் எங்களால் எப்படி அம்மம்மா இவ்வுலகில் வாழமுடியும்?

பலமான ஆணிவேர் கொண்ட தனிமரமாக நின்று, எங்களையெல்லாம் கட்டிக்காத்த தெய்வப்பிறவியே, நீங்களின்றி ஏது உலகம் அம்மம்மா எங்களுக்கு?
உங்கள் ஆத்மா சாந்திக்கு ஆண்டவனை வேண்டுகிறோம்.

உங்களில் என்றும் ஆழ்ந்த அன்புள்ள..
பேரப்பிள்ளைகள்
**சுரேஷ், ஜசிந்தா, சுஜிதா, ரமணன், ஷோபிதா**
(தர்மலிங்கம் லோகேஸ்வரியின் பிள்ளைகள்)



## Tribute from Grandchildren

We are lucky enough to have Appamma bless our lives. She was there when we were born and she saw us all grow and succeed in our lives in some way. Appammawas like another father to me, she loved talking so much to us just like our dad. She loved watching animal programs with us too but she always made time to say that we watched too much television!

Appamma was also like anither mother to us. She advised to study hard, wear more traditional cloths and save money. The most important lesson she taught us to always be there for my family – just like she did when she looked after our dad, uncles and grandchildren.

We will never forget you Appamma and we will be telling our children in the future about how strong, brave and wonderful you were. We hope we will continue to make you proud of us.

Love from

Aranja Thamotharan

Ayngaran Thamotharan

Garthiehan Thamotharan

## Tribute from Grandchildren

**Appamma**

Our appamma was the most kind-hearted and loving person we knew. Her heart and her generosity knew no bounds when it came to her family. Family was everything to her. Ironically despite being small in stature, she was in fact the biggest person in the room who naturally gained respect and was someone everyone looked up to for guidance and advice. Appamma's early losses in life and the struggles she endured in raising her children (singlehandedly) has given her unbelievable strength and shaped her into an


independent woman. Through her lifetime she has gained so much knowledge and wisdom and that she would always want to express herself and make her opinions known.

One thing we will always remember with appamma is that every conversation had a 'short story' linking back to her life in Srilanka (even if we were consumed in watching an episode of Eastenders). In most cases she would make comparisons between her life and most of the characters. In some instances she treated the drama actors like her own children and scolded them (shouting at the TV box).

We have learnt so many big life lessons from appamma, but equally have learnt so many small things that we can pass on to our own children.
For eg :

- Heerthana – teaching and disciplining Heerthana and showing her the importance of studying for her violin exam.
- Amsanaa – teaching Amsanaa how to make hot rasams and herbal remedies when you have the flu.
- Varuni – teaching Varuni her Tamil ABC's (அ,ஆ,இ) and showing her how make a neat 'kondai' (hair tied up in a bun).

She lived the majority of her life in France and remained independent. On our visits to France, we would always notice how her room was so simple, but so immaculate. Appamma loved all of Gods creations – humans... and also pigeons.



She used to refer to these pigeons as her own children and would feed them with her collection of seeds and nuts in her kitchen – if we were lucky we were allowed to feed them ourselves.

Appamma's legacy will live on through her seven children who are all successful in their own right - which is a testament to all her hard work raising them. She may be with God now, but we are sure she will be keeping an eye on us through the next stages of our life

Thank you for being our role model and inspiration and for making us into the strong headed women we are today.

**Heerthana, Amsanaa and Varuni (Grandchildren)**

**(Seganathan and Meenalosany's children)**

## Ammamma

Ammamma was always interested in languages. When she didn't heartily try to teach us French or Tamil, every time she visited us she would tell us to teach her some Danish sayings and expressions and we would have great fun hearing her repeat words in Danish.

She was really eager to find ways to put this new wisdom to use — some of these, of course, were less successful than others, but that still wouldn't prevent her from delivering the most confident linguistic performances.

Ammamma was a 'First things first' kind of woman and would never skip a thing. So naturally the first Danish words she wished to learn were "*Goddag*" and "*Farvel*", which is "Hello" and "Goodbye", because she wanted to be able to greet our visitors. She would even practise whenever we left the room and came back less than a minute later. That particular afternoon we would have visitors, and as they approached the door, she greeted them with great confidence and a

very convincing "Farvel". She quickly realised her mix-up and we all laughed.

With this same confidence she would regularly preach some moral story. Whether she was right or wrong, whether her timing was right or wrong, or whether it was just us being the younger generation, we would often toss off her remarks as old people's talk.

Only later would it dawn on us that there was actually some real truth in her punch-lines, and we are forever deeply grateful for her and what she taught us.

Grandchildren Thipan & Melanie

(Paranthaman Lalithasakthi's Children) from Denmark

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அப்பம்மா

என் அன்பின் அப்பம்மா உங்களுடன் சிறுவயதிலிருந்து வாழ்ந்ததை மறக்க முடியாது. எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்த ஆசான் நீங்கள்தான், எல்லோரும் வியப்பாகக் கேட்பார்கள் எங்கே இப்படித் தமிழ் கற்றாய் என்று? நான் பெருமையாக அப்பம்மா என்று கூறுவேன். என்னிடம் உள்ள பலவகையான தொப்பிகளையும் எங்கள் வீட்டில் இருக்கும்போது அணிந்து பார்ப்பதை என்னால் மறக்கமுடியாது. சிறு வயதில் நான் நிறையக்குறும்பகள் உங்களுக்குச் செய்துள்ளேன், ஆனால் நீங்கள் எப்போதும் சிரிப்புடன் ஏற்றுக் கொள்வீர்கள். உங்களுடைய எளிமையான வாழ்க்கைமுறை மிகவும் தனித்தன்மையானது. நீங்கள் எங்களுக்கு ஒரு முன்னோடி, உங்களை எங்களால் ஒரு போதும் மறக்க முடியாது. உங்களை நாங்கள் எப்போதும் நேசிப்போம்.

பேரன் விபூசன் (குமுதினி குகநாதன்)

## To Our Dearest Appamma,

Firstly I would like to thank you for passing down your nose haha! Honestly though thank you appamma for singlehandedly raising a great man – my dad. Everything he does for me has been as a direct result from your teachings. Of course beloved grandma, you were such a huge character yourself – for such a tiny person (literally the

tiniest person ever)! I loved seeing you swamped in your white sari burrito and still looking as chic as ever. I miss the times you lived with us and would wake me up in the middle of the night, looking like a ghost with the white sari and your white hair, to wake me up for 'uni'. I miss your non-stop talking, even to all my school friends. No one was a stranger and everyone was a friend; something I should really heed from you. I miss your lectures – I mean I had no choice but to listen because you definitely could not escape them! I miss that no matter what I had done that day, you would never without fail ask if I'd eaten – sometimes even forcing me to eat; AND no matter how old I was (primary school, secondary school or university graduate) you would always feed me with your hands. I will always be grateful and my greatest regret is that I did not appreciate you anywhere near as much as I should have. I wish I had told you many times to your face how amazing you were – but now I will have to say it in my prayers instead. I love you so much appamma and wherever you are, I hope you are chatting away to your hearts content!

Love

**Virginie (Kumuthini Kuhanathan)**


## Pooti,

You planted the seed of love and watched your family bloom. Only a heart as dear as yours would give so unselfishly. Although we never grew up by your side, we feel blessed to have met you & call you our Pooti.

Love Always,

Your eldest great grandchildren,

**Piraveena Puvirajah & Piratheepan Puvirajah**


பூட்டப்பிள்ளைகளாய் நாமிருக்க எங்களுக்கு
புத்தி சொல்லும் பூட்டி அம்மா எங்கே
உங்களது கதைகளை கேட்பது
எப்போது நீங்கள் செய்த பெரிய
காரியங்களை எங்களால் மறக்க
முடியாது, பூட்டி நீங்கள் எங்களுடன்
இருந்த நாட்களை நினைத்து வாழும்
உங்கள் பூட்டப்பிள்ளைகள்.

## To our great nan

Nan, although we're sad and see mum an Dad cry,
We understand that your still by our side
As we take life in each stride,
Although we've already said goodbye
We will find peace knowing how high
Your wings will fly,
And our memories of you we will hold
On tight because as we sit back we
Find you are still here inside our mind.
Nan, you meant so much to us all and
Although your not here causes us deep
Pain the memories of you is something
We will treasure, until we meet again

**Love Steven James and Aaron (Suresh Annmarie)**
**Atheeshan, Akshitha (Shobitha Aravinthan)**

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் அருமைப் பூட்டியம்மா.. ஆசைப் பூட்டியம்மா..
உங்கள் மறைவு எம்மை வாட்டுகிறதே பூட்டியம்மா..
பாராட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்த்தீங்கள் பூட்டியம்மா..
பாலர் கதைகள், படிப்பினைக் கதைகள்சொல்லி மகிழ்ந்தீர்கள் பூட்டியம்மா..
உங்களுக்கு சுகயீனம் என்றதும் ஓடோடி வந்தோம் பூட்டியம்மா..
ஒரு முறை விழிகளைத்திறந்து எம்மையெல்லாம் பார்த்துவிட்டு மறுபடியும் உறங்கினீர்கள் பூட்டியம்மா..
மாறாது உங்கள் நினைவு, மண்ணில் நாம் வாழும் மட்டும்.
பூட்டியம்மாவிற்கு எங்கள் அன்பு முத்தங்கள்.

கனடாவிலிருந்து பூட்டப்பிள்ளைகள் பிரித்திகா, அக்ஷயன், சருன், ஷார்னி, அரிஷ்

## அன்பான சின்னம்மா

எங்கள் சிறிய வயதிலிருந்து நாங்கள் உங்கள் வீட்டிற்கு சின்னம்மா, சின்னம்மா என்று ஓடிவருவோம். உங்களால் தான் எங்களுக்கு பூநகரியைத் தெரியும்.
நீங்களும் அக்கா, அக்கா என்று எங்கள் வீட்டிற்கு வருவீர்கள். உங்களுடைய பிள்ளைகளைப் போல் எங்களையும் அரவணைத்து நடப்பீர்கள்.
பின்பு நீங்கள் France, England வந்த பின்பு நாங்கள் எல்லோரும் திரும்பவும் சேர்ந்த சந்தர்ப்பத்தை நினைத்து சந்தோஷப்படுகிறோம்.
France ல் நீங்கள் இருக்கும் போது எங்கள் அம்மா உங்களிடம் வந்த நின்ற போது, நீங்கள் இருவரும் உங்கள் பழைய கதைகள், இளமைக்காலச் சம்பவங்கள் எல்லாம் மீட்டிப் பார்த்து, கதைத்து, சிரித்து மகிழ்ந்தீர்கள். அந்த சந்தர்ப்பத்தை உங்கள் இருவருக்கும் இறைவன் கொடுத்ததை நினைத்து பேரானந்தம் அடைகிறோம்.
எங்கள் அம்மாவின் இழப்பைத் தாங்க முடியாதது போலவே, இப்போ உங்களின் இழப்பையும் தாங்கமுடியாமல் நாங்கள் தவிக்கிறோம் சின்னம்மா..
உங்கள் ஆத்மா சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பெறாமக்கள்

**கனகராஜா(காலம் சென்ற), மகேஸ்வரி -**

**ஆனந்தராஜா, மஞ்சுளா**

**யோகராஜா, பேரி**

**நகுலராஜா, மதி**

**அரியராஜா, லிடியா**

# A Unique Lady beloved Sinnamma!

The demise of our beloved sinnamma, Packiam Ponniah was a great shock and anguish. I could not bear over a stretch of time,the departure of a woman with great personality and super sense of humour. My grievance came to a halt when I thought about her life, In fact sinnamma had a wonderful, contented and happy life .She was blessed with seven children,three boys and four girls.All the children played their part gracefully to look after their beloved mother when she needed them most,also I should not forget to mention this that her grand children also did their part too.Hats off to them!

Her tremendous ability was that the drive she had, to face the challenges every day in her life and to have accomplished them with success. To prove her success that we all can see how wonderfully her family is well in U.K, Canada and Srilanka.I admired her always for her good manners, being funny and her hospitality always second to none and never ending funny stories make you laugh uncontrollably. May her soul rest in peace.

Miss you Sinnamma!

Yours
loving,
**Yoga, Peri (periamma's son & DIL)**



# நன்றி நவிலல்



எமது அன்புக்கும் பாசத்துக்கும்
உரிய எமது குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்த
திருமதி பாக்கியம் பொன்னையா
அவர்களின் மறைவுச் செய்தி
அறிந்து எமக்கு மன ஆறுதல்
கூறியோர்க்கும், உள்நாட்டிலும்,
வெளிநாடுகளிலும் இருந்து தபால்,
தொலைபேசி மூலம் அனுதாபச்
செய்திகள் அனுப்பியவர்களுக்கும்,
மரணச் சடங்கின் போது பல
வழிகளிலும் உதவி
புரிந்தவர்களுக்கும், மலர்மாலைகள்
வைத்து, மலர் வளையங்கள்
அனுப்பி வைத்து அஞ்சலி
செய்தவர்களுக்கும், இறுதிக்
கிரிகைகளில் நேரில் கலந்து
கொண்டவர்களுக்கும்,
அந்தியேட்டிக் கிரியை,
வீட்டுக் கிரியைகளிலும்
பங்குகொண்ட உற்றார்
உறவினர்கள் நண்பர் களுக்கும்,
குறிப்பாக பிரான்சில் தனிமையாக
இருந்த வேளை எல்லாவிதமான
உதவிகளையும் புரிந்த பேத்தி
ஜசிந்தாவுக்கும் அவரது கணவர்
குணராஜாவுக்கும், இறுதியாக
இந்த இனிய நினைவு மலரை
குறுகிய காலத்திலே அச்சிட்டு
உதவிய JR Print
அச்சகத்தாருக்கும் எமது
உள்ளங்கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Designed & Printed @ JR Print
Tel: 020 8503 6643